<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண். *73/2021*</u>

***2023*–ஆம் ஆண்டு மார்ச் மாதம் *24*-ஆம் நாள் வெள்ளிகிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய *PW-3* வது நபரின் வாக்குமூலம் *(1969*–ஆம் ஆண்டின் *54* வது விதியில் *9*–வது பிரிவின் ஏற்பாட்டின் படி*)* திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரேமராணி | தொழில் | :துணை வட்டாட்சியர், குன்னம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : செல்வன் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : பெரம்பலூர் | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : *47/2023* |

**வாதி தரப்பு முதல் விசாரணை :–**

1) நான் எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். சர்வே எண். 111/1 பி–லிருந்து சர்வே எண். 111/1 எம் வரை எப்போது பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் 1987–ஆம் வருடம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.
2) இந்த உட்பிரிவு சம்மந்தமாக சம்மந்தப்பட்ட தரப்பினர்களை அழைத்து விசாரணை செய்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் அவ்வாறு விசாரணை செய்யப்படவில்லை. நான் எடுத்து வந்த கோப்பின் அடிப்படையில் சர்வே எண். 111/1 எம்–ல் உள்ளது என்ன வகையான பாதையாக வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் நிலவியல் நடைபாதை என குறிப்பிடப்பட்டுள்ளது.
3) சர்வே எண். 111/1 எம் UDR – Subdivision –ன் போது வண்டி பாதையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அது பட்டா நிலமாக உள்ளது. இந்த நிலவியல் பாதையை தனி நபர் பட்டாவாக மாற்ற முடியாது என்றால் சரிதான். அவ்வாறு பட்டா வழங்கப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.
4) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 21.05.1962–ல் கிரையம் பெற்ற பத்திரத்தில் எத்தனை ஏக்கர் காட்டப்பட்டுள்ளது என்றால் 5 ஏக்கர் 9 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
5) வருவாய் துறையினரால் வாதிக்கு வழங்கப்பட்ட வா.சா.ஆ. 4– ஆன பட்டா பாஸ் புத்தகத்தில் 4 ஏக்கர் 53 செண்ட் ( 1.83 ஏர்ஸ்) என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) வாதி கிரையம் வாங்கிய பத்திரத்தில் உள்ள இடத்திற்கும், பட்டா பாஸ் புக்கில் உள்ள இடத்திற்கும் எவ்வளவு குறைகிறது என்றால் 56 செண்ட் குறைவாக பட்டா வழங்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் அவர்களுடைய கிரையப்பத்திரத்தின் படி பட்டா மாற்றம் செய்ய முயற்சித்தபோது வாதிகளுக்கு அறிவிப்பு ஏதேனும் அனுப்பி விசாரணை ஏதும் செய்யப்பட்டதா என்றால் இல்லை. அ பதிவேடு சாட்சி சான்றாவணம் 1– ஆகவும், புல வரைபடம் சாட்சி சான்றாவணம் – 2 ஆகவும், ( அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது). குறியீடு செய்யப்படுகிறது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :–**

1. நத்தம் மாறுபாடு தொடர்பாக நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக எந்த சர்வேயர் ஆவணங்கள் தயார் செய்த என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தமிழ்நாடு முழுவதும் நிலஉடமை மேம்பாட்டு திட்டம் 1986 முதல் செயல்படத்துடங்கியது என்றால் சரிதான்.

2. மேற்படி நத்தம் நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தரப்பினருக்கும் தனித்தனியாக நோட்டீஸ் அனுப்ப வேண்டும் என அந்த அரசாணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி திட்டத்தின் கீழ் நிலஉடமையாளர்கள் எந்த அளவுக்கு நிலத்தை அனுபவம் செய்தார்களோ, அந்த அளவிற்கு அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

3. அவ்வாறு இடங்களை அளந்து முடிக்கும் போது தரப்பினருக்கு ஏதேனும், நிறை, குறை இருந்தால் அதை சரிசெய்து கொள்ள ஒரு அலுவலர் தனியாக நியமனம் செய்யப்பட்டு இரண்டு வருடகாலம் கால அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதேனும் பெறப்பட்டிருந்தால் அதனை சரிசெய்து இறுதியாக அரசாணை வெளியிடப்பட்டது என்றால் சரிதான்.

4. மேலும், பாதிக்கப்பட்ட தரப்பினர்கள் மேல்முறையீடு செய்வதற்கும் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. இவ்வழக்கின் வாதிகள் UDR – ல் உள்ள அளவுகள் தவறு என்று இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை.

5. தாவா சொத்துக்குரிய UDR – Proceedings– ஐ நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான். ஒருவேளை நான் அதை பார்த்திருந்தால் வாதி UDR– ல் உள்ள அளவுகள் தவறு என்று நடவடிக்கை எடுத்துள்ளாறா இல்லையா என்ற விபரம்

எனக்கு தெரியவந்திருக்கும் என்றால் சரிதான். UDR –Proceedings என்பது Permanent Record என்றால் சரிதான்.

6. சர்வே எண். 111/1 எ – விலிருந்து 111/1 எம் வரை மொத்த விஸ்தீரனம் 5 ஏக்கர் 80 செண்ட் என்றால் கூட்டிப்பார்த்தால்தான் தெரியவரும் என்றால் சரிதான். நான் தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டு வந்திருக்கும் புல வரைபடத்திற்கும், தற்போது என்னிடம் காட்டப்படும் புல வரைபடத்திற்கும் என்ன வேறுபாடு உள்ளது என்றால் 3 Subdivision – கள் குறிப்பிடப்படாமல் உள்ளது.

7. நான் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள Ex.X1 ல் சர்வே எண். 111 – க்கு வடபுறம் சர்வே எண். 105 இல்லை. மேல்புறம் 112,120 உள்ளதா என்றால் இருக்கிறது. கீழ்புறம் 107,109,110 உள்ளதா என்றால் இருக்கிறது. தென்புறம் 121 உள்ளதா என்றால் உள்ளது.

8. நான் தாக்கல் செய்துள்ள Ex. X1 – ல் பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், பேரளி கிராமம் சர்வே எண். 111 மொத்த விஸ்தீரனம் 6 ஹெக்டேர் 15 1/2 ஏர்ஸ் உள்ளதா என்றால் 6 ஹெக்டேர் 18 1/2 ஏர்ஸ் உள்ளது. UDR அளவின் படி அளவிடும்போது ஒரு ஏக்கருக்கு 5 முதல் 8 செண்ட் வரை வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் சர்வே எண். 111 ல் 18 1/2 ஏர்ஸ் என மாறி இருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு உண்டு.

9. சர்வே எண். 119 – ன் கீழ் கீழ்புறம் சர்வே எண். 120 உள்ளது. 120– ல் 2009–ல் Subdivision ஆகி உள்ளது. 12.10.2007– ல் 120/1 என Sub division இல்லை என்றால் சரிதான். நான் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள Ex.X1 உண்மையான ஆதரவு அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :–

சர்வே எண். 120 –க்கும் இந்த வழக்கிற்கும் சம்மதம் உள்ளதா என்றால் இல்லை.

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif-Cum-Judicial Magistrate,
Kunnam.

DMC KUNNAM